சிந்தனை
தொகுதி V
இதழ் III, 1993

கார்த்திகை 1993

# வரலாற்றுக்கு முற்பட்ட கால ஈழத்து இந்துசமய நம்பிக்கைகள்

திருமதி கலைவாணி இராமநாதன்

ஈழத்திலே இந்து சமயத்தின் ஆரம்ப காலம், அதன் வரலாறு வளர்ச்சி நிலை என்பன போன்ற விடயங்களை ஆராய விரும்புவோருக்கு இந்து சமயத்தினுடைய புராதன வரலாறானது தெளிவற்றதொன்றாகவே காணப்படுகின்றது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டு காலப்பகுதி வரையிலே காணப்படுகின்ற சமய நம்பிக்கைகள் யாவும் விளக்கங்கட்கு அப்பாற்பட்ட வகையிலே சிதறிக் கிடக்கின்றன. கிறிஸ்துவிற்கு முற்பட்ட கால இந்து சமயத்தின் புராதன நம்பிக்கைகள் அக்காலத்து வரலாற்றிலே எவ்வாறு இடம் பெற்றிருந்தன என்பதனையே இங்கு எடுத்துக் காட்டுவது எமது நோக்கமாகும்.

இந்தியாவின் சமய வரலாறானது எவ்வாறு வேதகால மக்களுடன் இணைந்ததொரு வரலாறாக அமைந்திருக்கின்றதோ; அவ்வாறே ஈழநாட்டு இந்து சமய வரலாறானது ஈழத்திலே புராதன காலம் வாழ்ந்த ஆதிக்குடி மக்களின் வரலாற்றுடன் கலந்து பட்டதொன்றாக விளங்குகின்றது. வைதீக சமயநெறிக்கு வேத இலக்கியங்கள் ஆதாரமாக அமைந்திருப்பது போன்று ஈழத்திலே பௌத்த சமய வரலாற்றிற்கு 'மகாவம்சம்' என்ற பௌத்த சமய நூல் ஆதாரமாக அமைந்திருக்கின்றது. ஈழநாட்டினுடைய புராதன இந்து சமய வரலாற்றினை அறிந்து கொள்வதற்கும் 'மகாவம்சம்' என்ற இந்த இலக்கியமே பெரிதும் உறுதுணையாக அமைகின்றதெனலாம். ஆயினும் ஈழத்திலே வளர்ச்சி பெற்ற இந்து சமயமானது முக்கியமாக வழிபாடு கடவுளர் வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், பண்பாட்டுக் கூறுகள் பலவற்றிலும் இந்தியப் பழம்பெரும் சமயமாக விளங்கும் இந்து சமயத்துடன் பெரிதும் ஒத்துள்ளன என்பதுடன் அதனின்றும் வேறுபடுத்திப் பார்க்க முடியாதவாறு ஒன்றிணைந்துள்ளதாகவும் விளங்குகின்றது. எனினும் அச் சமயமானது கால, தேச, பிராந்திய வேறுபாடுகட்கு ஏற்ப காலப்போக்கிலே தமக்கெனச் சில தனித்துவமான இயல்புகளைக் கொண்டதாகவும் ஈழத்திலே வளர்ச்சியடைந்தது.

## வரலாற்று மூலகங்கள்:

கிறிஸ்துவிற்கு முற்பட்டகால இந்து சமய வரலாற்றுப் பின்னணிகளை அறிந்து கொள்ளவும், விளங்கிக் கொள்ளவும் பௌத்த சமய வரலாற்றுச் சான்றுகளுடன் பிற வரலாற்றுச் சார்பான இலக்கிய மூலங்களும் உதவியுள்ளன. அது மாத்திரமன்றி ஈழத்திற்கும் இந்தியநாட்டிற்குமிடையே ஆதிகாலம் தொட்டு வர்த்தக, கலாசாரத் தொடர்புகள் இடையீடின்றி நடைபெற்று வந்திருக்கின்றன. இத்தகைய .தொடர்புகள் வாயிலாகவும் மக்களினத்தவரிடையிலே சமய நம்பிக்கைகளிலும் உள்ளீடான தொடர்புகளும் கருத்துப் பரிமாற்றங்களும் ஏற்பட வாய்ப்புண்டாயிற்று. இதனால் இந்திய இலக்கியங்களும் இதிகாச புராண

கால சான்றுகளும் ஈழத்து இந்துசமய நம்பிக்கைகளைப் பற்றிய தகவல்களைத் தந்துதவுகின்ற ஆதார நூல்களாகக் காணப்படுகின்றன. அத்துடன் ஈழத்து இந்துசமய வரலாறானது அந்த நாட்டுப் பழங்குடி மக்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள், மரபுக் கதைகள், கர்ண பரம்பரைச் செய்திகள், கட்டுக் கதைகள் பலவற்றிலேயே நீண்ட காலமாக இருந்து வருகின்றது என்பதும் ஓரளவு உண்மையாகும். விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகள் பெருகி வளர்கின்ற தற்காலத்திலே இத்தகைய சில செய்திகள் மதிப்பிழந்து போவதும் இயற்கையானதாகும்.

ஆதலினால் தர்க்க ரீதியாகச் சில வரலாற்று மூலங்களை உறுதிப்படுத்துவதற்கு இலக்கியச் சான்றுகள் போதாதவிடத்துத் தொல்பொருட்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள் போன்ற அடிப்படை ஆதாரங்களை பயன்படுத்திப் பல தகவல்களை வெளிக்கொணர முடியும். ஆகவே ஈழத்து இந்து சமயம் தொடர்பான பல புராதன கால நம்பிக்கைகளை மேற்குறிப்பிட்ட வரலாற்று சாதனங்களின் ஆதாரங்களுடன் ஈழத்து வரலாற்றாசிரியர்களும், தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களும் பெருமளவில் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் இக்கட்டுரையில் இடம்பெறும் பல தகவல்கள் பெரும்பாலும் மகாவம்சம்,' ஈழத்து 'ஆதி பிராமிக் கல்வெட்டுக்கள்' (Early Brahmi Inscriptions) என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும்.[1]

ஈழத்து ஆதிவாசிகளிடையே இந்து சமயத்தொடர்பான வழிபாட்டு முறைகளில் முருக வணக்கம், சிவ வணக்கம், நாகவணக்கம், கிராமதேவதை வணக்கம் போன்ற தெய்வ வழிபாடுகள் நிலவி வந்துள்ளன. என்பதை ஈழத்து வரலாற்றாசிரியர்கள் பலரும் எடுத்துக்காட்டியுள்ளனராயினும் அவை ஒரு தொடர்ச்சியான வரலாற்று மரபினைக் காட்டுவதாக அமையவில்லை என்றே கருத முடிகின்றது. இருந்தபோதிலும் தற்காலம் பல்கலைக்கழக அளவிலே இத்தகைய ஆராய்ச்சிகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதெனக் கூறலாம்.

ஈழத்துத் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் அநுராதபுரம் (Anuradhapura), பொலநறுவை (Polonnaruwa) போன்ற பகுதிகளில் மேற்கொண்ட தொல்பொருளாராய்ச்சிகளின் பயனாகப் பல பயன்தரும் செய்திகள் வெளியிடப்பட்டன. தமிழ் பிரதேசங்களான மாதோட்டம், வல்லிபுரம், நல்லூர் முதலிய இடங்களில் இன்னும் முறையான ஆராய்ச்சிகள் இடம்பெறுமாயின் மேலும் பல அரிய தகவல்கள் கிடைக்க வாய்ப்புகள் உண்டாகலாம். கல்வெட்டுச் சான்றுகளிலே கி. பி. 3 ஆம் நூற்றாண்டளவிலே பொறிக்கப்பட்ட 'பிராமிக் கல்வெட்டுக்களே' ஈழத்திலே கிடைக்கும் மிகப் பழைய சாசனங்களில் காலத்தால் மிக முற்பட்டவையாகும். மேலும் இதிகாச புராண இலக்கியக் கருத்துக்களும் ஈழத்து இந்து சமய நம்பிக்கைகளில் பெருமளவு பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதனால் தற்கால விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி முறைகளில் பயிற்சியில் ஈடுபட்டவர்களால் தானும் இக்கருத்துக் குவியல்களின் உண்மை-இன்மைகளை விமர்சிப்பது பெரும் சிக்கலான விடயமாகவே உள்ளது. ஈழத்து வரலாறு பற்றியும், தொல்பொருட்களைப் பற்றியும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஆய்வாளர்களிலே டாக்டர் எஸ். பரணவிதான, டாக்டர். கா. இந்திரபாலா, டாக்டர். சி. க. சிற்றம்பலம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களில் சிலராவர்.[2]

## ஆதிக்குடிமக்கள் :

ஈழத்திலே காணப்படும் புராதன பண்பாட்டு வளர்ச்சியானது பல இனமக்களால் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஒரு கலவையாகவே அமைந்துள்ளது. இவற்றினை வட இந்திய பண்பாட்டுக் கூறுகளும், தென் இந்தியப் பண்பாட்டுக் கூறுகளும் சங்கமித்த ஒரு பண்பாட்டு நிலைப்பாடாகவே கூறமுடியும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களி

லிருந்தே இந்திய நாட்டிற்கும், ஈழத்திற்குமிடையே நிலவிய பண்பாட்டுத் தொடர்பிற்கு வர்த்தகம் அல்லது வாணிபத் தொடர்பே பிரதான காரணமெனலாம். கி. மு. 3 ஆம் நூற்றாண்டளவிலே இத்தகைய தொடர்புகள் நிச்சயமாக இருந்தன என்பதற்கு அனுராதபுரம், வவுனியா போன்ற இடங்கட்கு அருகாமையில் கிடைக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன. இப்படியாக ஈழத்திலே வணிகர்களும், பிறநாட்டவர்களும் அவ்வப்போது குடியேறித் தமது பண்பாட்டைப் பரப்பியிருக்க வேண்டும் என்ற உண்மை புலனாகும்.[3] ''இலங்கையிலே வளர்ந்த பண்பாட்டை ஆராய்ந்தால் அது பல இனங்கள் கூடி வளர்த்த பண்பாடு என்பதனைக் காணலாம்''. என்ற பேராசிரியர் கா. இந்திரபாலாவின் கூற்று இவ்வுண்மையினை மெய்ப்பிப்பதாகும்.[4]

புராதன ஈழத்து வரலாற்றினை ஆராய்ந்த வல்லுனர்கள் ஈழநாட்டிலே மூவகையினத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்ததாகக் கருதுகின்றனர். அக்கருத்தின்படி ஈழத்து வடபகுதியில் நாக இனத்தவர்களும், தென் பகுதியிலே இயக்கர்களும் (இராட்சதர்கள்), மத்திய பகுதியிலே வேடர் குல இனத்தவர்களும் வாழ்ந்து வந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. வட இந்தியாவிலிருந்து ''விஜயனது வருகையின் போது ஈழத்திலே இயக்கரும், நாகரும், வேடரும் ஆதிக்குடிகளாக வாழ்ந்து வந்தனர்''[5] என்பது மகாவம்சம் என்ற நூலிலும் காணப்படும் செய்தியாகும். ஆதிக்குடிகளான இம்மக்களினத்தவரிடையே மிகப் பழங்காலத்திலிருந்து இந்து சமயம் சார்பான நம்பிக்கைகளும், வழிபாட்டு நெறிகளும் வழக்கிலே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த வகையான செய்திகளைக் குறிப்பிடுமிடத்து மகாவம்சத்திலே பல்வேறுபட்ட கருத்து வேறுபாடான தகவல்களும் இடம் பெற்றுள்ள போதிலும் அவை தற்செயலாக இடம்பெற்ற செய்திகளாதலாலும் வரலாற்றுக்கு முற்பட்ட கால சமய நம்பிக்கைகளை அறிந்து கொள்வதற்கு அவற்றினைப் பயன்படுத்துவதில் தவறில்லை என்பர் ஆய்வாளர்.[6]

கி. முற்பட்ட கால இந்துசமய நம்பிக்கைகளை கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலே ஈழத்திலே கிடைத்துள்ள கற் சாசனங்களும் எடுத்துக் காட்டுகின்றன. ஈழத்து பௌத்த சமய வரலாற்றிற்கு முற்பட்ட காலம் காணப்பட்ட சமய நம்பிக்கைகள் தொடர்பாக எஸ். பரணவிதான என்ற வரலாற்றாசிரியர் சிறப்பாக ஆராய்ந்து பல செய்திகளை வெளியிட்டுள்ளார். அக்கட்டுரையிலே பேராசிரியர் பரணவிதான அவர்கள் இயக்கத் தெய்வ வழிபாடு (யட்சர், யட்சினி) மரவழிபாடு, சிவ வழிபாடு, லிங்க வழிபாடு, வைதிக மதச் செல்வாக்கு போன்ற அம்சங்கள் அக்காலத்து ஆதிக்குடி மக்களிடையே நிலவியதாகவும் குறிப்பிட்டுள்ளார், அதேசமயம் இத்தகைய நம்பிக்கைகள் பௌத்த சமயத்துடன் ஒருமித்து வளர்ந்து வந்துள்ள நம்பிக்கைகள் என கட்டுரையாசிரியர் கருதுவராயினும், பிராமிக் கற்சாசனங்கள் தருகின்ற செய்திகளையும் தொகுத்துப் பார்க்குமிடத்து அத்தகைய சமய நம்பிக்கைகள் பௌத்த சமய வருகைக்கு முன்பிருந்தே ஈழத்து ஆதிக்குடி மக்களிடையே காணப்பட்டன எனக் கூறமுடியும். பண்டைக்கால ஆபிரிக்க, ஆஸ்திரேலிய, வட அமெரிக்கப் பழங்குடி மக்களிடையே ஆவி வழிபாடு, விலங்கு வழிபாடு என்பவற்றுடன் மேற்குறிப்பிட்ட வழிபாட்டு நெறிகளும் இடம் பெற்றிருந்த போதும், அவை ஆதியிலிருந்தே சிறிது திருத்தமுற்றனவாகக் காணப்படாது விசுவாசத்தினடிப்படையிலும், நம்பிக்கை வழியாகவுமே தோற்றம் பெற்றிருந்தன என்பதனை அந்த நாடுகளின் பண்பாட்டுக் கூறுகளை ஆராய்ந்த ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்.[7] ஈழநாட்டிலும் அதனையொத்த காலப் பகுதிகளில் அத்தகைய வழிபாட்டு நெறிகளின் கூறுகள் காலப்போக்கிலே தன்னியல்பாகவோ அன்றிப் பிறதலையீடுகள் காரணமாகவோ ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

### முருக வழிபாடு

விஜயனது காலத்திலே ஈழத்திலே வாழ்ந்த மலைச்சாதியினரதும், வேட்டுவ மக்களினதும் தலைவர்களாக விளங்கியவர்கள் மலைத்தேவதைகளைப் பூசித்து வந்தனர் எனவும் ஈழத்து வரலாற்று நூல்கள் கூறுகின்றன.[8] வேட்டுவ வகுப்பினரிடையே ஆலமரம், பனைமரம் என்பன வணக்கத்திற்குரியனவாகவும்[9] முருகக் கடவுள் வணக்கம் மலைசார்ந்த பகுதிகளிலும் காணப்பட்டன. முருக வழிபாட்டுடன் தொடர்பு கொண்ட 'கதிர்காமம்' என்ற தலத்தின் பூர்வீகப் பெயர் 'கஜரகம' எனப்பட்டதாக மகாவம்சத்திலே கூறப்பட்டதுடன், புத்தபெருமானின் போதிமர நாட்டு விழா வைபவத்தின் போது தீசன் என்ற மன்னன் கஜரகாமத்திலே வாழ்ந்த பிரபுக்களையும் அழைத்துக் கௌரவித்ததாகவும் அந்நூல் குறிப்பிட்டுள்ளது.[10] அத்துடன் கி. மு. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல கற்காசனங்களில் முருகக் கடவுளுடன் தொடர்புடைய பல்வேறு பெயர்கள் காணப்படுகின்றன. வேலன் குமாரன், விசாகன், வேலு, வேலுச என்றிவ்வாறு ஒன்றுக்கும் மேற்பட்ட பெயர்களை இக் கல்வெட்டுக்களில் காணமுடியும்.[11] வேட்டுவ, மலைச்சாதியின மக்களுடைய வழிபாடானது 'உயிர்மை வழிபாடு' (Animism) என்றே அறியப்படுகின்றது. கதிர்காமத்திலே 'கந்தேயக்க' என்னும் கடவுள் போர்க்கடவுளாகவும், செல்வத்தைத்தரும் கடவுளாகவும் வேடர்களிடையே வழிபடப்பட்டுள்ளதாக சேர். பொன். அருணாசலம் என்பார் குறிப்பிட்டுள்ளமை[12] இங்கு நினைவு கூரத்தக்கது.

### இயக்கத் தேவதை வழிபாடு:

ஈழத்து ஆதிக்குடிகளிடையே இயக்கத் தெய்வ வழிபாடுகள் நிலவிவந்துள்ளமையினை முன்னரே குறிப்பிட்டோம். யட்சர், யட்சினி என்னும் பெயருடைய தேவதைகள் காவல் தெய்வங்களாக அம்மக்களால் அக்காலத்திலே வழிபாட்டிலே இடம் பெற்றுள்ளன. கல்வெட்டு ஒன்றிலும் 'யட்சினி' என்னும் பெயர் காணப்படுகின்றது. பாண்டு காபயன் என்ற சிங்கள மன்னன் ஈழத்தை ஆட்சிபுரிந்த காலத்திலே சித்தராஜ், காலவெல என்ற இரண்டு இயக்க தேவதைகட்கு தனது தலைநகரின் எல்லையிலே கோயில் அமைத்து வழிபட்டதுடன், தனக்குப் போரின் போது உதவி செய்த 'யட்சினி' என்ற தேவதைக்கும் உருவம் அமைத்து ஆண்டு தோறும் பூசை செய்தான் என்ற செய்திகளையும் மகாவம்சம் என்ற நூலிலிருந்தும், கல்வெட்டு சாசனங்களிலிருந்தும் அறிய முடிகின்றது.[13]

### பெண் தெய்வ வழிபாடுகள்

புராதன மலைவாழ் மக்களிடையே கிராம தேவதைகளின் வழிபாடும் இடம் பெற்று விளங்கியதை மகாவம்சம் எடுத்துக் காட்டும். பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிக் கற்சாசனங்களிலிருந்து விரிவான குறிப்புகளெதுவும் பெற முடியாவிட்டாலும் சக்திக் கடவுட்குரிய சில பெயர்களை ஆங்காங்கு காணமுடிகின்றது. தேவி, காளி நகுலினி என்பன அவற்றிலே சிலவாகும்.[14] பூர்விகக் குடிமக்களது வழிபாடுகள் பற்றி ஆராய்ந்த ஆசிரியர் சிலர் மலைத் தெய்வமாகிய 'பார்வதி' வேட்டுவ – சிங்கள மக்களிடையே வழிபடு தெய்வமாக விளங்கியிருக்கலாம் எனவும், கிராம தேவதைகளின் வழிபாடும் அக்காலம் வழக்கிலே இருந்துள்ளதெனவும் கருதுவர். 'கிரியம்மன்' என்னும் பெயரிலே 'ஏழு கன்னிமார்கள்' என்பவர்களை இணைத்து வழிபட்ட மரபும் காணப்படுகின்றது. இவைகள் காட்டிலே உறையும் தெய்வங்களாக மலைவாழ் மக்களினால் நம்பப் பட்டிருக்க வேண்டும்.[15]

திருகோணமலை என்னும் இடத்திலே 'கன்னியாய்' என்ற பகுதியிலே ஏழு வெந்நீர் ஊற்றுக் கிணறுகள் உள்ளன. அவற்றினை 'ஏழு கன்னியாய் வெந்நீர் ஊற்றுக்கள்' என்ற பெயரிலே அப்பிரதேச மக்கள் புனிதமாகப் போற்றித் தீர்த்தக்கிண

றுகளாகக் கொண்டாடுவர். முல்லைத்திவு என்னும் பகுதியிலே அப்பிரதேச மக்களிடையே 'சப்த கன்னிகை வழிபாடு என்ற ஒன்று இன்னும் வழக்கிலே இருந்து வரும் ஒன்றாகும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்திலே காணப்படும் 'நாச்சிமார் வழிபாடு' என்பதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இவை அனைத்திற்கும் புராதன காலம் ஈழத்திலே நிலவிவந்த 'கிரியம்மன்' எனப்பட்ட 'ஏழு கன்னிமார்' முன்னோடியாக அமைந்திருக்கலாம் எனக் கருதவும் இடமுண்டு. பொதுவாக ஈழத்திலே பூர்வீக காலத்திலே நடைபெற்று வந்த வழிபாடானது ஒழுங்குபடுத்தப்படாத திருத்தமுறாத ஒரு வழிபாட்டு நெறியென்றே கொள்ள வேண்டும்.[16] இவையனைத்தும் பெரும்பாலும் இந்து சமய வழிபாட்டுடன் தொடர்புடைய நம்பிக்கைகளை உள்ளடக்கியனவாகவே அமைந்திருக்கின்றன எனலாம்.

## நாக வழிபாடு:

'நாகர்கள்' என்ற ஒரு இனத்தவர் பற்றிய குறிப்புக்களும் மகாவம்சத்திலே வருகின்றன.[17] ஈழநாட்டின் பல பகுதிகளிலே நாகர்கள் பரவலாக ஆட்சி புரிந்து வந்துள்ளனர். 'கல்யாணி' என்ற ஒரு இடத்திலே நாகர் ஆட்சி நடைபெற்றமை பற்றிக் கல்வெட்டுக்கள் சில விபரங்களைத் தந்துள்ளன.[18] பிராமி (Brahmi) கற்சாசனங்களிலே உபராஜநாக, உபாசிகனாக, நாகராஜா என்னும் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளதில்ருந்து[19] நாகர்கள் அரசர்களாகவும், சேனாதிபதியாகவும், குருமார்களுடன் தொடர்புபடுத்திப் பேசப்பட்டுள்ள விடயங்களும் ஓரளவு புலனாகின்றன. மேலும் ஈழத்தின் வடபகுதியிலும் நாக இனத்தவர்கள் பெருமளவில் வாழ்ந்து வந்துள்ளனரென்பதனை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர். இந்த மக்கள் நாகவழிபாட்டினை உடையவர்களாதலால் 'நாகர்கள்' என அழைக்கப்பட்டனர். ''நாகர்கள் பற்றிய மகாவம்சம், மணிமேகலை கூறும் விடயங்கள் கட்டுக் கதைகள் என்பதில் சந்தேகமில்லையாயினும், அவர்களில் பெரும்பான்மையோர் பின் தங்கிய ஆதிவாசிகளாகச் சிறு சிறு சனக் குழுக்களை அமைத்து வாழ்ந்ததுடன் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து முன்னேற்றமடையவும் தொடங்கினர்''.[20] எனவும் அறிகிறோம். வடபகுதியிலே 'நாகதீபம்' என்ற பெயரிலே விளங்கிய அரசானது காலப்போக்கிலே அனுராதபுர மன்னர் ஆட்சியின் கீழ் வந்ததும், பின்னர் ஒருகாலம் மறைந்து போயிற்று எனவும் கூறப்படுகின்றது.[21] நாகர்களை சிவகணங்களுள் ஒன்றாக வைத்துப் புராண மரபுகள் கூறுவதிலிருந்து நாகாபரணத்தையுடைய சிவன் நாகர்களது வணக்கத்திற்குரிய கடவுளாகக் கருதப்பட்டிருக்க வேண்டும் என்பதும் உணரப்படும். 'புராணமரபுகளை முற்றாக ஒதுக்கிவிட்டு ஒரு சமய வரலாறு எழுதுவதும் கடினமானதென்றே கூறவேண்டும்'.[22]

## வேதகாலக் கடவுளர்நிலை:

வேதகாலத்திலே பெரும் தெய்வங்களாகப் பேசப்பட்டு வந்த பல கடவுளர்கள் பௌத்த சமய நூலான மகாவம்சத்திலே 'சிறு தெய்வங்களாக' வைத்துப் பேசப்படும் நிலையினையும் காணமுடிகின்றது. புராண கால மரபுகளிலே இந்திரன் முதலிய வேதக் கடவுளர்களைவிட மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் பெரும் தெய்வங்கள் என்ற நிலையிலே வளர்ச்சியடைந்தமை போன்று, மகாவம்சத்திலும் வேதகாலக் கடவுளர்கள் பல சிறு தெய்வங்களாக்கப்பட்டுள்ள சாயலை அவதானிக்க முடியும். இங்கு இந்திரன், விஷ்ணு, வருணன், சூரியன், சந்திரன் போன்ற கடவுளர் அனைவரும் திக்கு பாலகர்களாக விபரிக்கப்பட்டுள்ளனர்.[23] கல்வெட்டுக்களிலே கூட வருணன், அக்கினி, மித்ர, குபேரன் போன்ற கடவுளர் பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன.[24] விஷ்ணுவைக் குறிக்கும் பெயர்களான விஹுய, யகோபால, கானதத்த, கிருஷ்ண, நாரர்யண, கோபால, ராம்.[25] போன்ற நாமங்கள்

கற்சாசனங்களிலே பல்வேறிடங்களில் வந்துள்ளன.

### விஷ்ணு வழிபாடு:

'தேவி நுவர' என்ற சிங்களப் பகுதியிலே உள்ள இடத்திலேயுள்ள விஷ்ணு கோயில் சிங்கள மக்களிடையே இன்னும் மகாவிஷ்ணு வழிபாடு சிறப்புடன் விளங்குவதற்கு சிறந்த உதாரணமாக விளங்குகின்றதெனலாம். வருணன் என்ற கடவுள் 'உபுல்வன்' என்ற பெயரிலே ஆரம்பத்திலே சிங்கள மக்களினால் வழிபடப் பட்டுள்ளார்.[26] இதனைப் பாளி இலக்கியங்களும், சிங்கள இலக்கியங்களும் கூறியுள்ளன. இவற்றிலிருந்து வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே வருண வழிபாடு ஈழத்திலே நிலவியிருப்பதாகக் கருத இடமுண்டு. இக்கடவுள் இதிகாச மரபுகளுடனும் தொடர்புபடுத்தப்படுவதனால் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்தே ஈழத்து மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும். தென்னிலங்கையிலே நீர்க்கடவுளான வருண வழிபாடு இதனை விடச் சிறப்பாக வேறெந்தப் பகுதியிலும் காணப்படவில்லை எனலாம். 'உபுல்வன்' என்றால் சிங்கள மொழியிலே 'உப்பு' எனப்படும், கடல்நீர் உப்புத்தன்மை வாய்ந்தது என்பதனால் வருணனுக்கு இப்பெயர் சிங்கள இலக்கியத்திலே இடம்பெற்றிருக்க வேண்டும். காலப்போக்கில் இக்கடவுளுக்குரிய அம்சங்கள் அனைத்தும் விஷ்ணுவுக்குரியதாகக் கொள்ளப் பட்டிருக்கலாம் என்பர் எஸ்.பரணவிதான என்னும் அறிஞர்.[27] ஏனெனில் கடலின் நிறம் நீலம் ஆதலால் 'உப்புலவன்' என்ற வருணக் கடவுள் பிற்காலம் பாற்கடலில் பள்ளிகொள்ளும் நீலவண்ண கிருஷ்ணனாக ஒருமைப்படுத்தப் பட்டு 'உபுலவண்ணன்' என்ற பெயரிலும் விஷ்ணு அழைக்கப்பட்டான் என அறிய முடிகின்றது.

### அந்தணர் செல்வாக்கு:

கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்து ஈழநாட்டிலே அந்தணர்கள் சமூகத்திலே மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தனர். பௌத்த சமயம் பரவிய பின்னரும் கூட சிங்கள அரசர்களினால் பிராமண குலத்தவர்கள் கௌரவிக்கப்பட்டமையினையும், சிறப்புடன் வாழ்ந்து வந்தமையினையும் பல வரலாற்றாதாரங்கள் தெரிவிக்கின்றன. (ஈழத்தின் முதல் அரசனாக மகாவம்சம் கூறும் 'விஜயன்' என்ற மன்னனுக்கு 'உபதிச' என்ற பிராமணரே ராஜகுருவாக விளங்கினார் எனவும், 'பண்டுல' என்ற அந்தணர் வேதங்களைக் கற்ற பண்டிதர் எனவும் இவரது மகனான 'சந்தன்' என்பவரே 'பாண்டுகாபயன்' என்ற சிங்கள மன்னனுக்கு முதலமைச்சராக விளங்கினார் என்ற இன்னோரன்ன பல செய்திகள் அக்காலத்திலே அந்தணர் அரசவையிலே பெற்றிருந்த உயர்வினை வெளிப்படுத்துவனவாகவுள்ளன.[28] இந்துசமயக் குருமார்களாக விளங்கிய இவர்களைக் கற்சாசனங்களிலே 'பமண', 'பமணதிச', பிரஹ்மதத்த, யாகதந்த போன்ற பெயர்களிலே அழைக்கப்பட்டுள்ளனர்.[29] யாகங்களை ஆற்றிக் கொடுப்போராதலால் 'யாகதத்த' என்ற பெயர் வழங்கியிருப்பதிலிருந்து வேள்விகள், யாகங்கள் அக்காலத்திலே இடம் பெற்றிருக்கலாம் என எண்ணவும் இடமுண்டாகின்றது.

### சிவ வழிபாடு:

ஈழத்திலே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நிலவிய சிவ வழிபாட்டினை நுணுகி ஆய்ந்து அறிவதற்குரிய ஆதாரங்கள் அருகியே காணப்படுகின்றன. புத்தரின் ஈழவருகை பற்றிக் குறிப்பிடும் மகாவம்சம் அவர் முதலில் 'சுமணகூட' என்ற இடத்திற்கு வருகை தந்ததாகக் குறிப்பிடுகின்றது.[30] இந்த இடத்தினைத் தமிழ்பேசும் மக்கள் 'சிவனொளிபாதம்' என்ற பெயரிலே மிக நீண்ட காலமாக அழைத்து வருவது அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாகும். இன்றுவரை தமிழ், சிங்கள மக்கள் அனைவரும் சிவன்ராத்திரி திருவிழாக் காலங்களில் பாத யாத்திரையாக இம்மலைக்குச் சென்று அங்குள்ள திருப்பாதங்களையும், அதிகாலையில் சூரியோதய தரிசனத்தையும்

கண்டு வழிபட்டு வருவர். அத் திருப்பாதங்கள் சிவனுடையவை என இந்துக்களும், புத்தபெருமானுடையவை என பௌத்த மக்களும் கருதி வழிபாடு செய்கின்றனர். இதிலிருந்து ஆதிகாலம் முதல் சிவ வழிபாடு ஈழத்திலே நிலவியிருக்கலாம் எனவும் தோன்றுகின்றது. மேலும் பாண்டுகாபயன் என்ற மன்னன் சமயக் குருமார்கட்காக ஒரு சமயக் கட்டிடம் கட்டிக் கொடுத்தான். இக் கட்டிடம் 'சிவிகசாலா' எனவும் 'சிவலிங்கக் கோயில்' எனவும் கூறப்படுகின்றது.[31] 'புரதேவ' என்ற ஒரு கடவுளின் பெயரும் வழிபடு கடவுளர்களில் ஒருவராகத் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. தேவ, புலதேவ, விஸ்வதேவ, தேவகூட என்ற பெயர்களும் கல்வெட்டுக்களிலே காணப்படுகின்றது.[32] விஜயன் ஆட்சிக் காலத்தின் பின்வந்த அரசர்கள் பலர் 'சிவ' என்ற பெயரையும், 'சிவ' என்ற தொடக்கத்தையுடைய பெயர்களையும், 'சிவ' என்பதனை முடிவிலே கொண்ட பெயர்களையும் கொண்டிருந்தனர். ஈழத்திலே கிடைத்த அறுபதிற்கும் மேற்பட்ட கற்சாசனங்களிலே 'சிவ' என்ற சொல்லுடன் தொடர்புபட்ட பெயர்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. சிவபூதி, சிவகூட, சிவதேர, மகாசிவ, கிரிகண்ட சிவ முட சிவ போன்ற சில மன்னர்களது பெயர்களை உதாரணத்திற்காக இங்கே குறிப்பிடலாம்.[33] இவையனைத்தையும் நோக்குமிடத்து கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலே பௌத்தம் உத்தியோக பூர்வமாக ஈழத்திலே பரப்பப்பட்ட வேளையிலே அதைப்போன்று வேறு பல சமய நம்பிக்கைகளும் ஈழத்து மக்களிடையே வழக்கிலிருந்து வந்துள்ளன என்பதனை அறியமுடிகின்றது.

பௌத்த சமய வருகைக்கு முன்னரே ஈழத்திலே புராதன பெருமை வாய்ந்த சிவத்தலங்கள் இருந்திருக்க வேண்டும் என்பதனையும் பல ஆய்வுகள் வெளிப்படுத்துவதாகவிருக்கின்றன. 'கோணகம' என்ற துறைமுகமானது வரலாற்றுப் பிரசித்தி பெற்றதாக அக்காலத்திலேயே பேசப்பட்டுள்ளது.[34] தற்போது ஈழத்திலே பிரபல்யமடைந்து விளங்கும் திருகோணமலைத் துறைமுகமே 'கோணகம' என்ற பெயரிலே முற்காலம் கூறப்பட்டிருக்க வேண்டும். இத்துறைமுகத்தருகிலே புகழ் பெற்றிருந்த சிவாலயம் 'திருக்கோணேஸ்வரம்' எனப் பெயர் பெற்றிருக்கலாம். இந்தச் சிவாலயமானது இயற்கையாலும், பிறதலையீடுகள் காரணமாகவும் காலத்திற்குக் காலம் அழிவுபெற்று மீண்டும், மீண்டும் புதுமைபெற்று வளர்ந்துள்ளது. கி. பி. 8 ஆம் நூற்றாண்டின் பின்னரே திருக்கோணேஸ்வர ஆலயம் பிரசித்தி பெறத் தொடங்கி உள்ளது. ஆயினும் புராதன காலத்திலே மலைப்பாங்கான பகுதியிலே ஒரு சிவாலயம் புகழுடன் விளங்கியிருக்க வேண்டும் என்பதற்கு மகாவம்சத்திலிருந்து கிடைக்கும் மற்றோர் தகவல் ஆதாரமாகவுள்ளது. அக்குறிப்பின்படி திருகோணமலை என்ற இடத்திலே 'கோகர்ணம்' என்னும் ஒரு சிவதேவாலயம் இருந்ததாக அறியப்படுகின்றது.[35] இந்தச் சிவதேவாலயம் மகாசேனன் என்ற மன்னனால் பௌத்த சமயமல்லாத வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டபோது அவ்வாறு அழிக்கப்பட்ட தலங்களுள் ஒன்றாக இருக்கலாம் எனக் கே. ஏ. நீலகண்டசாஸ்திரி என்பார் குறிப்பிட்டுள்ளமையிலிருந்து இவ்வுண்மை புலனாகும்.[36] திருகோணமலையிலே மகாசேனன் ஆணையினால் இடிக்கப்பட்ட சிவதேவாலயம் திருகோணேஸ்வரமாக இருக்கலாம் என்ற பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்களின் கூற்றும் மேற்குறிப்பிட்ட உண்மையினை வலியுறுத்துவதாகக் கொள்ளலாம்.[37]

2000 ஆண்டுகளாக 'மாதோட்டம்' என்ற இடமும் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலே சிறந்த ஒரு துறைமுகமாக விளங்கியுள்ளது. 'மாந்தை' எனப்படும் மாதோட்டம் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து 'மகாதித்தி' என அழைக்கப்பட்டுள்ளதாகப் பௌத்த இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம்.[38] மகாதித்தி என்றால் 'மகாதீர்த்தம்' எனப் பொருள்படும். மாதோட்டக் கரையிலே புராதன காலம்

அமைந்திருந்த மற்றோர் சிவாலயமான 'திருக்கேதீஸ்வரம்' என்ற கோயிலே இந்தத் தீர்த்தக் கரையிலே அமைந்திருந்ததாகப் புராண இலக்கியங்களாலும் அறியப்படுகின்றது. மாந்தை என்ற இடத்தின் பழம் பெருமைகள் பற்றி பாளி, சிங்கள இலக்கியங்களிலே கூறப்படுமிடத்து அந்த இடமானது மகாதித்தி, மகாதித்த, பட்டனகாம, போன்ற பெயர்களிலே இடம்பெற்றுள்ளது. வடமொழியிலே 'மகாதீர்த்தம்' என்று வரும் சொற்றொடரிலிருந்து மேற்குறிப்பிட்ட பெயர்கள் பாளி, சிங்கள இலக்கியங்களிலே கையாளப்பட்டிருக்கலாம். ஆதிகாலத்திலே இத்தலத்திலே நிலைகொண்ட கடவுளானவர் சிறப்பான வழிபாடுகளைப் பெற்று வந்ததன் காரணமாக இத்தலமானது மிகப் புண்ணிய தீர்த்தங்களில் ஒன்றாக ஈழத்து மக்களால் போற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. 'பொதுவாக மாந்தையினை ஒரு முக்கிய துறைமுகமாகவும், கேதீஸ்வரம் அங்கு திகழ்ந்த ஒரு சிவத்தலமாகவும் கொள்வதே பொருத்தமானது.[39] ஈழத்திலே ஆதிகாலம் தொட்டு வாழ்ந்து வந்த சைவக் கடவுள் நம்பிக்கையுள்ள மக்கள் மிகமுற்பட்ட காலத்திலிருந்தே சிவவழிபாட்டுத் தலங்களை அமைத்து வழிபட்டு வந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. முன்னர் குறிப்பிட்டவாறு கி. பி. 3 ஆம் நூற்றாண்டிலே மகாசேனமன்னனால் அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வர சிவாலயம் இதற்குத் தக்கதொரு சான்றாகும்.[40]

மன்னார்த் தீவிலேமாந்தை என்ற இடத்திலே இன்றும் காணப்படும் திருக்கேதீஸ்வரம் பற்றிப் புராண வரலாறுகள் குறிப்பிடுகின்றன. ராகு, கேது இருவருக்கிடையே ஏற்பட்டதொரு சச்சரவிலே கேது என்ற நாக தெய்வமானது தனது சாபம் நீங்கும் பொருட்டு ஈழத்திலே பூசித்து வந்த சிவாலயமே பிற்காலம் 'திருக்கேதீஸ்வரம்' எனப் பெயர்பெற்றதெனவும் அறியமுடிகின்றது. இவ்வாறே இராமாயண காலத்திலே இராவணனால் பூசிக்கப்பட்ட சிவத்தலம் திருக்கோணேஸ்வரமாக மரபுவழியாக இன்றும் பேசப்பட்டு வருவதனால் இவ்விரு சிவாலயங்களும் ஈழத்திலே கிறிஸ்துவிற்கு முற்பட்டகால சிவவழிபாட்டின் தொன்மையினையும், இந்து சமய நம்பிக்கைகள் பௌத்த சமயம் ஈழத்திலே பரவி வளர்ச்சியடைந்த காலங்களிலிருந்தே வளர்ச்சியடைந்திருக்கலாம் என்பதனையும் உணர்த்துவனவாகவும் கொள்ளலாம். அத்துடன் பிற்காலம் இந்தச் சிவாலயங்கள் கி. பி. 8 ஆம் நூற்றாண்டளவிலே பாரிய வளர்ச்சி பெற்றிருந்ததனை நாயன்மார்களது தேவாரப் பாடல்கள் வாயிலாகவும் அறிவதனால் இத்தலங்கள் ஈழத்திலே தேவாரப் பாடல் பெற்ற சிவாலயங்கள், என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுள்ளன □

---

### அடிக்குறிப்புக்கள்


1. Paranavitana, S., *Inscriptions of Ceylon* (IC) Vol· I, Colombo, 1970.
   Geiger, W., *Mahavamsa* (MV) (Translation), Colombo, 1950.

2. இந்திரபாலா, கா., இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, 1970, பக். 1–3.
   Paranavitana, S., 'Pre Buddhist Religious Beliefs in Ceylon', *JRASCB*, Vol. XXXI. 1929, PP. 302 - 325.

3. *Ibid*, PP. 305 – 320.

4. இந்திரபாலா, கா., மு. கு. நூல், முன்னுரை, ப. VI

5. *MV*, Ch. I, 20 – 30; 46 – 70; Ch. VI; 68.

6. Paranavitana, S., *op. cit*, P. 302
இந்திரபாலா, கா., யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், 1972, ப. 4.

7. Parker, H., *Hindusim in Ancient Ceylon*, 1909, PP. 24 – 24; 139 – 145.
குணசிங்கம், செ., கோணேஸ்வரம், பேராதனை, 1973, ப. 15.

8. *Mahavamsa*, Ch. VII, 68; Ch. X, 99; Ch. XV, 101, 135.

9. *MV.*, Ch. VII, 89, 90; Ch. V, 42.

10. *MV.*, Ch. XIX, 54, 62.

11. Paranavitana, S., *Inscriptions of Ceylon* (IC) Vol. I, 1970, IC: 403, 477, 880, 190, 321, 710, 1062, 356, 357, 413, 889, 169, 319, 481, 529, 647.

12. Arunasalam, P., *Conses Report on the Ceylon* 1901, P. 88.

13. *MV*, Ch. VIII, 104 (Inscriptions) *IC*: 89, *MV.*, Ch. X, 4, 52, 88.

14. *IC*, 385, 386, 784, 869, 911, 972.

15. Parker, H., *Op. Cit* PP. 137 – 152.

16. குணசிங்கம், செ., மு. கு. பக். 15 – 16.

17. *MV*. Ch. I, 63, 74.

18. *IC*, 577.

19. *IC*. 487, 734, 1207, 1007, 1040.

20. இந்திரபாலா, கா., யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம், பக். 4 – 5.

21. இந்திரபாலா, கா., கு. நூல் முன்னுரை; 1992. ப. VIIIமே.

22. குணசிங்கம், செ., மு. கு. நூல் ப. 5.

23. *MV.*, Ch. XXI, 30; Ch. XXX, 68, 89

24. *IC*, 2, 660, 7_7, 773, 469.

25. *IC*, 1218, 1225, 415, 171, 1007, 159, 347, 843.

26. *MV*. Ch. VII, 5, 8, 9.

27. Paranavitana, S., *The Shrine of Upulavan at Devundra*, Colombo, 1953, PP. 25-59. '*Memories of the Archealogical Survey of Ceylon*'. Vol. VI.

28. *MV*. Ch. VII, 44.

29. *IC*. 92, 205, 228, 269, 758, 830.

30. *MV*, Ch. XIX, 54. 62.

31. *MV*. Ch. X, 98, 99.
Paranavitana, S., 'Pre Buddhist Religious beliefs in Ceylon,' *Op. Cit* PP. 326 - 327.

32. *MV*., Ch. XXV, 86, 94.
*IC:* 647, 760, 392, 1084, 136.

33. *IC:* 443, 449, 450, 633, 756, 757, 841, 861
குணசிங்கம், செ., மு. கு. நூல் ப. 15.

34. *MV*. Ch. VIII, 24: Ch. XXXV, 113.

35. *MV*., Ch. XXXVII, 37, 40, 41.

36. Nilakanda Sastri, K. A., 'Saivais Ancient Ceylon,' *Paranavitana,'S., Feliciation Volume* 1965, P, 311.

37. இந்திரபாலா, கா., 'அனுராதபுரத்தில் உள்ள சைவக்கோயில் அழிபாடுகள்,' இந்து தர்மம், பேராதனை, 1966 - 67, பக். 5 - 6.

38. *MV*., Ch. XXV, 79, Ch. XXXV, 25.

39. சிவசாமி, வி., 'திருக்கேதீஸ்வர மரபுகளும், ஐதிகங்களும்,' திருக்கேதீஸ்வரத் திருக்குடத் திருமஞ்சன மலர், கொழும்பு 1976.

40. இந்திரபாலா, கா., முற்குறிப்பிட்ட கட்டுரை, இந்து தர்மம், பேராதனை, 1966 - 67